துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! ஆர்.டி.சேகர் வழங்குகிறார்!

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் 1048 பேருக்கு அறுசுவை உணவு!

## கலாநிதி வீராசாமி - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி - ஜெ.ஜெ.எபினேசர் பங்கேற்பு! ந.ம.மகேஷ்குமார் தலைமை!

சென்னை, டிச.15-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் 1048 நபர்களுக்கு அசைவ சமபந்தி விருந்து வழங்குதல் நிகழ்ச்சி இன்று (15 12 2024) பகல் 11.30 மணி அளவில் 48வது வட்டம் சோலையப்பன் தெருவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ந.ம. மகேஷ்குமார் தலைமை வகிக்கிறார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் வடசென்னை ந. மனோகரன், பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ. சு.சத்ய நாராயணன், இரா.பாலன், எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ், எஸ்.திருஞானம், இ.மதன், வி. மலையம்மாள், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி. முருகன், ஜே.கௌரிஸ்வரன், பாலா லட்சுமணன், ந.ம. தினேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ந.குமார், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி. சதீஷ், நீ.எழிலரசன், எஸ். சதீஸ்வரி, என். வேதா, ந. மணிமாறன், எஸ்.ரமேஷ், எஸ்.யுவராஜ், பி.கே.முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சமபந்தி விருந்தினை துவக்கி வைத்து சிறப்பிக்கிறார்.

மேலும் இவ்விழாவில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐ ட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, பி.டி.பாண்டி செல்வம், டாக்டர் சுபேர்கான், மு.கோபி, க.நாகம்மை, வே.சிவகுமார், கி.ராஜேந்திரன், நா.சண்முகம் லியோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமி வேலு, ப. சோமசுந்தரமூர்த்தி, லியோ கே.மதன், ஜே.கே.நாதன், மாமன்ற உறுப்பினர்கள் விஜயலட்சுமி, பா.வேளாங்கண்ணி, கீதா சுரேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக கு.பிரவீன் குமார் நன்றி கூறுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம் 21, போர் தொடுக்கும் இளம் தலைவர்! தோள்கொடுக்கும் துணை முதல்வர்! எனும் தலைப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் எஸ்.கே.கோவிந்தன் தலைமையில் நேற்று (14.12.2024 சனிக்கிழமை) சென்னை, அண்ணாநகர், இ.எஸ்.ஐ. பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இந்நலத்திட்ட விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு கழக செய்தித் தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் டிசம்பர் 3 இயக்கம் மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் பேராசிரியர் தீபக்நாதன் ஆகியோர் 5 கிலோ அரிசி, கிலோ துவரம்பருப்பு, கிலோ கடலை பருப்பு, கிலோ உளுத்தம் பருப்பு, கிலோ சிறு பருப்பு, 1 கிலோ உப்பு, 1 கிலோ சர்க்கரை, 100 கிராம் மிளகாய்தூள், 50 கிராம் மஞ்சள்தூள், 2 பாக்கெட் சேமியா, 1 கிலோ கோதுமை மாவு, 1 கிலோ எண்ணெய், 1 பாக்கெட் டீதூள் ஆகிய 13 பொருட்கள் அடங்கிய தொகுப்பையும் மற்றும் நிதியுதவி ரூ.1000 வழங்கி சிறப்பித்தனர்.

நா.மோகன்குமார் ஏற்பாட்டில் இ.கண்ணப்பன் முன்னிலை! புழல் எம்.நாராயணன் தலைமை!

# மாதவரம் 16 வது வட்டத்தில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

சென்னை, டிச. 15

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டம், ஆண்டார்குப்பம் பகுதியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாவட்ட பிரதிநிதி நா.மோகன்குமார் நாகூரார் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமை தாங்கினார்.

16 வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், மாவட்ட துணை செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்.

ஆண்டார்குப்பம் செக்போஸ்ட் பகுதியில் அமைந்துள்ள கழக கொடி கம்பத்தில் துணை முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடி ஏற்றி வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பகுதி கழக நிர்வாகிகள், கே. சிவசங்கரன், பா. சந்திரன், பி. தரணி, வட்ட நிர்வாகிகள் அருள், வக்கீல் வெங்கடேசன், பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ் குமார், குமரவேல், ராஜ் மோகன், முத்தையா, ரமேஷ், மாரி, சடையங்குப்பம் நைனியப்பன், வக்கீல் சுரேந்தர், ஆண்டார்குப்பம் ராஜ்குமார், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், மணலி புது நகர் சி.எம்.ராஜா, குளக்கரை மஞ்சுநாதன், ரிஷி குமார், கடப்பாக்கம் மகேஷ்குமார், சாம்ராஜ், தமிழ், காமராஜபுரம் நாகலிங்கம், கிருபாகரன், விக்னேஷ், சுந்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாவட்ட பிரதிநிதி நா.மோகன்குமார் செய்திருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், 16வது வட்டம் புனித அந்தோனியார் சமூக நலக்கூடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தண்டையார்பேட்டை அப்போலோ மருத்துவமனை நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்பெற்றார்கள். இ.சி.ஜி. ரத்த பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகள் முடித்து மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. பகுதிகழகத்தின் சார்பில் 200 தாய்மார்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது. 16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, மாவட்ட துணை செயலாளர் அறிவாளி பாலகிருஷ்ணன், பகுதி நிர்வாகிகள் கே.சிவசங்கரன், நா.மோகன் குமார் நாகூரார்,பா. சந்திரன், பி.தரணி, எஸ். கருணாகரன், இ.அருள், இ.வெங்கடேசன், என். பரசுராமன், புவனேஸ்வரி மகேஷ் குமார், குமரவேல், ராஜ்மோகன், முத்தையா, வி. மாரி, ரமேஷ், சி .எம். ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செம்மீன் எடிசன், எலந்தனூர் சிவப்பிரகாஷ் , காமராஜ் புரம் கிருபாகரன், குளக்கரை மஞ்சுநாதன், கடப்பாக்கம் மகேஷ்குமார், சாம்ராஜ், புகழேந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

டாக்டர் எம்.எஸ்.சரவண குமார் நிகழ்ச்சி ஏற்பாடு! ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை!

கே.ஏழுமலை - நந்தம் கி.மதி - எஸ்.முரளி முன்னிலை!

# சென்னை தென் மேற்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் இலவச மருத்துவ முகாம்!

## மயிலை த.வேலு - கனிமொழி என்.வி.என்.சோமு - எழிலன் நாகநாதன் - தமிழச்சி தங்க பாண்டியன் பங்கேற்பு!

சென்னை டிச. 14,

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் எம்.எஸ்.சரவணகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று (15.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கண்மணி பல் மருத்தவமனை சி.ஐ.டி. நகர், தியாகராயர் நகரில் இலவச மருத்துவ முகாம் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ, தலைமை வகிக்கிறார். மேற்கு பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம். சி., மயிலை மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ். முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மருத்துவ முகாமை மாவட்டக் கழகச்செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

மேலும் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி, டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., ராஜா அன்பழகன், டாக்டர் ஜெ. அருண், டாக்டர் கலை கதிரவன், டாக்டர் கோ.சக்தி விக்னேஷ், டாக்டர் ஆர். சக்திபிரியா, டாக்டர் பி.ஜி. கணேஷ்ராஜா, மருத்துவர் சீ.மணிகண்டன் மற்றும் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

டாக்டர் எஸ்.ஜெயகர், டாக்டர் பா.நிவிதா, டாக்டர் எஸ்.சில்வியா, டாக்டர் ஜி.விவேகானந்தன், டாக்டர் இ.ஜனனி, எஸ்.சக்திலாவண்யா, அ.முருகவேல், நா. மாறன், ஜெ.லாரன்ஷியா, கார்த்திக்ராஜா, டாக்டர் பி.லட்சுமணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை சென்னை தென் மேற்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் எம்.எஸ்.சரவணகுமார் ஏற்பாடு செய்துள்ளார்.

எஸ். முரளி முன்னிலை! சாந்தோம் ஆ. அந்தோணி ஏற்பாட்டில்

# மாவட்ட மீனவரணி சார்பில் காக்கும் கரங்கள் இல்லத்தில் அறுசுவை உணவு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச.15-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டமீனவரணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் சாந்தோம் ஆ.அந்தோணி ஏற்பாட்டில் மயிலை கிழக்கு பகுதிசெயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் சாந்தோம் காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு அறுசுவை உணவு வழங்குகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட மீனவரணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு பகுதிசெயலாளர் எஸ். முரளி முன்னிலையில், சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு சாந்தோம் நெடுஞ்சாலையில் உள்ள காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் இன்று (15.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12.00 மணி அளவில் முதியோர்களுக்கு சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு அறுசுவை உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள் வட்டச்செயலாளர்கள் கோ.கண்ணன், ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி மற்றும் மாவட்ட மீனவரணி நிர்வாகிகள் ஆர். ராமலிங்கம், கு.ரவிச்சந்திரன், ப.மதிவாணன், டி.வி. பாபு, இரா.மா.சுதாகரன், நெய்தல் எஸ்.குரு, சுரேந்தர் குணா, சிவராமன், மோ. பிரபு, செல்வகுமார், ரா. சுரேந்தர், பா.மதன் மற்றும் 126 வட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியை மாவட்ட மீனவரணி அமைப்பாளர் சாந்தோம் ஆ.அந்தோணி ஏற்பாடு செய்துள்ளார்.


சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்! இன்று (15-12-2024) நடைபெறும் பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு!



மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 63 | பி.பிரபாகரன் வட்டக் கழக செயலாளர் | நாராயணன் நாயக்கர் தெரு, கிரீன்கேப் ஹோட்டல் எதிரில் புதுப்பேட்டை, சென்னை- 2 | சேலம் சுஜாதா தலைமைக்கழக பேச்சாளர் இம்ரான் தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே. சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.


# 120வது வட்டக் கழகம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம்!

## வட்டக் கழகச் செயலாளர் ஐ.சி.எப். எம்.சங்கர் வேண்டுகோள்!

சென்னை, டிச.15-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு அறிவுறுத்தல்படி, திருவல்லிக்கேணி பகுதி கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. வழிகாட்டுதல்படி இன்று (15.12.2024) மாலை 6 மணி அளவில் 120வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் வட்ட செயலாளர் இல்லத்தில், அவைத் தலைவர் ஆர்.முனுசாமி தலைமையில் வட்டக் கழக செயலாளர் ஐ.சி.எப். எம்.சங்கர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள், BLA2 தலைவர்கள், முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிரணியினர் என அனைவரும் இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, 120வது வட்ட தி.மு.க. செயலாளர் ஐ.சி.எப். எம்.சங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் திருவொற்றியூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி வடிவுடையம்மன் திருக்கோவிலில், இந்து சமய அறநிலையத் துறை சார்பில், நேற்று (14.12.2024) பக்தர்கள் தரிசன அனுபவம் குறித்து ஆலோசனைகளை தெரிவிக்க மின்னணு ஆலோசனைப் பெட்டி வசதியினை தொடங்கி வைத்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மின்னனு ஆலோசனைப் பெட்டியை சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் மாநகராட்சி 1வது மண்டலக் குழு தலைவர், கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு, கோயிலின் உதவி ஆணையர் செயல் அலுவலர் திருமதி.நற்சோணை, முன்னாள் மாமன்ற உறுப்பினர், வட்ட கழக செயலாளர் எஸ்.தமிழ் செல்வன் மற்றும் கழகத் தோழர்கள் பலர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருவாரூர் கு. தென்னன்

### டிசம்பர் 15 (2011)



தலைவர் கலைஞர் அவர்களின் இளமைக் காலந்தொட்டு உற்ற நண்பராகத் திகழ்ந்தவரும் – கழகம் தொடங்கிய காலம்முதல் உறுப்பினராக விளங்கியவரும் – திருவாரூர் நகர்மன்றத் தலைவர் – நகரக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – மாவட்டக் கழக அவைத் தலைவராகவும் பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் 2000ஆம் ஆண்டு ‘பெரியார் விருதினை’ தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

“எனக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டென்ற போதிலும் ‘நண்பன்’ என்ற தகுதியிலே முதலிடத்தில் வைத்துக் கருதப்படும் திருவாரூர் தென்னனை இழந்துவிட்டேன்” என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**